# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No.299/ 2020 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 3 |
| Name | : சுரேந்திரகுமார் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.03.2026.

--------

எதிரி ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது உசிலம்பட்டி, வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.04.2019ம் தேதி 14.15 மணிக்கு கூடல்புதூர் ஆண்டி மகன் ராகவன் என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலம் பெற்று அப்போது நிலைய பொறுப்பில் இருந்த சார்பு ஆய்வாளர் திரு. மோகன்ராஜ் என்பவர் அரசு மருத்துவமனை, மதுரையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சிகிச்சையிலிருந்த ராகவன் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று பின்னர் நிலையம் வந்து நிலைய கு.எண்.215/2019, சட்டபிரிவுகள் 294(பி), 307 இதச வின் கீழ் வழக்குபதிவு செய்தார். அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.1. சாட்சி 1 கொடுத்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2. இவ்வழக்கு கோப்பினை விசாரணைக்காக அப்போது காவல் ஆய்வாளராக இருந்த திரு.மாடசாமி அவரது பார்வைக்கு வைக்க, அவர் இவ்வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கில் முதல் விசாரணை செய்துள்ளார். காவல் ஆய்வாளர் இன்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வரமுடியாத காரணத்தினால் அவரது சார்பாக ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன். காவல் ஆய்வாளர் மாடசாமி அவர்கள் அன்றே

சம்பவம் இடம் சென்று காலை 7.15 மணிக்கு சாட்சிகள் திரு.கணேசன், முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம், பார்வை மகஜா் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.3 மற்றும் வரைபடம் அ.சா.ஆ.4. சம்பவ இடத்தில் வழக்கில் சம்மந்தப்பட்ட 180 ml அளவு கொண்ட உடைந்த காலி பாட்டிலை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். அவர் தயார் செய்த அத்தாட்சி அ.சா.ஆ.5. மேலும் இவ்வழக்கின் சாட்சிகளான திரு.ராகவன், அன்பழகன், செந்தில், தவமணி, ராஜ்குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். சாட்சிகள் விசாரணையிலிருந்தும், அவரது ரகசிய விசாரணையிலும் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியான ஆறுமுகம் என்பவரை அன்றைய தினமே 10.30 மணிக்கு உசிலம்பட்டி, முருகன் கோவில் முன்பு கைது செய்தும், பின்னர் எதிரியானவர் எவ்வித துன்புறுத்தலின்றி தாமாக ஒப்புதல் வாக்க மூலம் கொடுக்க முன்வந்ததால் இவ்வழக்கின் சாட்சிகளான தவமணி மற்றும் ராஜ்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார். மேற்படி ஒப்புதல் வாக்கமூலம் அ.சா.ஆ.6. பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தின்படி சம்பவம் இடத்திற்கு எதிரியை அழைத்து சென்று பார்வையிட்டு, பின்னர் காவல் நிலையம் கொண்டு சென்று அவரை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட தடய பொருளை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி படிவம் 91 அ.சா.ஆ.7. என்னிடம் காட்டப்படும் 180ml அளவுள்ள உடைந்த பாட்டில் சா.பொ.1. பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட வாதியானவருக்கு மேல்சிகிச்சையளித்து கருத்துரை வழங்கிய மதுரை, ராஜாஜி மருத்துவமனை மருத்துவர் மலர்கண்ணன் என்பவரை விசாரணை செய்து வாக்கமூலம் பதிவு செய்தும், பின்னர் முதலுதவி சிகிச்சையளித்த மருத்துவர் பாலமுருகன் என்பவரை விசாரணை செய்து காயச்சான்று பெற்றுள்ளார். மேற்படி காயச்சான்று அ.சா.ஆ.8. பின்னர் காவல் ஆய்வாளா் மாடசாமி பணிமாறுதலில் சென்றதால், அவருக்கு பிறகு பணியில் சேர்ந்த காவல் ஆய்வாளர் சார்லஸ் அவர்கள் இவ்வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டும், மேற்படி சாட்சிகளை விசாரணை செய்ய, ஏற்கனவே அவரிடம் கூறியது போன்று கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் இவ்வழக்கின் சம்மந்தபட்ட 180 ml காலி மதுபாட்டிலை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு

அனுப்பியுள்ளார். அதன்பின்னர் வழக்கு விசாரணை முடித்து 17.10.2019ம் தேதி பிரிவுகள் 294(பி), 307 இதச வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கிலன் புலன் விசாரணை அதிகாரி இல்லையென்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சி 1 நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றால் சரிதான். அவர் 7 வருடங்களாக ஊரில் இல்லையென்றால் சரிதான். வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் பிறழ்சாட்சியாகியுள்ளார்கள் என்றால் சரிதான். நான் சொன்னது போன்று சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரி நிரபராதி என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல எதிரி-கள் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.12 14:57:23 +0530

உதவி அமர்வு நீதிபதி,
உசிலம்பட்டி.